
ஆத்மஜ்ஞான மாலை
பராபரன்

<u>நூல் விளக்கம்</u>

நூலின் பெயர்	:	ஆத்மஜ்ஞான மாலை
நூல் ஆசிரியர்	:	பராபரன்
வெளியீடு	:	பராபரம் பாடசாலை
மொழி	:	தமிழ்
வகை	:	தன்னாட்டம்
முதற்ப்பதிப்பு	:	2022
பக்கங்கள்	:	21
உரிமை	:	அனைவருக்கும்
கட்டமைப்பு	:	சாதா பைண்டு அட்டை
விலை	:	அகவிழிப்பு

ஓம் ஸ்ரீ குருவே சரணம்

என்னுரை

நம்முடைய ஸனாதனதர்மமான சாஸ்த்திரங்கள் கூறுவது என்னவெனில், மனிதன் தன்னுடைய சுயத்திற்கு திரும்பவேண்டும், அதற்கான வழிகளை நமது ஸனாதன ரிஷிகள் சாஸ்த்திரங்கள் வாயிலாக எடுத்துறைத்துள்ளனர். அந்த சாஸ்த்திரங்களாவன வேதங்கள், உபநிடதங்கள், திருக்குறள், திருமந்திரம், திருவாசகம், பகவத்கீதை, திருவிவிலியம், திருக்குரான், தம்மப்பதம் மற்றும் பல நூல்கள்.

இந்த சாஸ்த்திரங்களை மனிதன் சான்றோர்கள் வாயிலாக சிரவணம், மனனம், நிதித்யாஸனம் (மன விசாரம்) செய்து உடல், மனம், புத்தி, சித்தம், அஹங்காரம் அற்ற தூய உணர்வாகிய அகண்ட ஸச்சித்தானந்த சொரூபமாகிய நிர்குண ப்ரஹ்மமே **நான்** என்று உணர்வதே **ஆத்ம விசாரம், தத்வ விசாரம், சுய விசாரம்** என்பதாகும்.

ஏனெனில் மனித உடலுக்கு மட்டுமே ஆறாவது அறிவாகிய ப்ரத்யேக கருவியாக **மனம்** கொடுக்கப்பட்டுள்ளது. இந்த மனம்தான் தூய உணர்வை அறிவதற்கான திறவுகோல் (சாவி) என்றால் அது மிகையாகாது.

ஒரு ஞானியுடைய உணர்வை **ப்ரஹ்மஜ்ஞானாவளீமாலா** என்ற பாடலை சமஸ்கிருத மொழியில் ஶ்ரீ ஆதி சங்கரர் இயற்றியுள்ளார், அதனை **ஆத்மஜ்ஞான மாலை** என்ற தலைப்பில் தமிழில் மொழி பெயர்த்து, தெளிவுரை செய்து, இச்சமுதாயத்திற்க்கு அளிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

ஆத்மஜ்ஞான மாலை பாடல், வீடுபேற்றை அடைந்த ஆத்மஞானியின் லட்சணத்தை நன்றாக விளக்கி கூறுவதன் மூலம், மானிடர்களுக்கு வீடுபேற்றை அடைவதற்கான வழியையும் இப்பாடல் எடுத்துரைக்கிறது.

இந்த **ஆத்மஜ்ஞான மாலை**யின் கருத்துக்களை, ஒரு தீரன்(முமுக்ஷு) நன்றாக படித்து, கருத்துக்களை உள்வாங்கி, தான் ஏற்று கொண்ட வாழ்க்கை முறையை பின்பற்றி, மனதை விசாரம் செய்து தன்னுடைய சுயத்திற்கு திரும்புவதில் எவ்வித ஐயமுமில்லை.

உன்னதமான இந்த **ஆத்மஜ்ஞான மாலை** என்ற பாடலுக்கு தெளிவுரையை செய்ய எல்லாம் வல்ல இறையருளையும், குருவருளையும் வேண்டிப்பணிகிறேன்.

நன்றி

அன்புடன்,
பராபரன்

॥ஆத்மஜ்ஞான மாலை॥

<u>தலைப்பு பொருள்</u>:

ஆத்மா – நான்
ஜ்ஞான – தன்னை எல்லாம அறியும் அறிவாக உணர்ந்த ஞானி
மாலை – பாடல்கள்

எல்லாம் அறியும் அறிவே நான் என்ற தன்னுணர்வை, இப்பாடல்களின் மூலம் ஞானத் தெளிவுண்டான ஞானி தன்னிலையை பகருகிறார்.

<u>தெளிவுரை:</u>

இந்த **ஆத்மஜ்ஞான மாலை**யில், வீடுபேற்றில் திளைத்து இருக்கும் ஞானியின் லக்ஷணம் நன்றாக விளக்கி கூறப்பட்டுள்ளது. அது எவ்வாறெனில், ஆத்மஞானி **தன்னை எல்லாம் அறியும் அறிவாகவே உணர்ந்து, தன்னில், தானாய், தன்மயமாய், தன்னுணர்வில் ஆனந்தத்தில் திளைக்கிருக்கிறார்**, அவரது வாழ்வியல் (செயல் மற்றும் செயலின்மை) மூலம், மானிடர்கள் வீடுபேற்றை அடைவதற்கான வழியையும் இப்பாடல் வரிகள் அழகாக எடுத்துரைக்கிறது.

....

<u>பாடல் வரிகள், பொருள் மற்றும் தெளிவுரை</u>

<u>சமஸ்க்ருத மூலப்பாடல்:</u>

ஸக்ரு'ச்ச்^{2}ரவணமாத்ரேண ப்^{3}ரஹ்மஜ்ஞானம் யதோ ப^{4}வேத் ।
ப்^{3}ரஹ்மஜ்ஞானாவளீமாலா ஸர்வேஷாம் மோக்ஷஸித்^{3}த^{4}யே ॥ 1॥

<u>பதச்சேதம்:</u>

ஸத் க்ருத் ச்ரவண மாத்ரேண; ப்ரஹ்மஜ்ஞானம் யதோ பவேத் |
ப்ரஹ்மஜ்ஞானாவளீமாலா; ஸர்வேஷாம் மோக்ஷ ஸித்தயே || 1 ||

<u>தாத்பர்யம்:</u>

நன்றாக கேட்ட மாத்திரத்தில் ஒருவர் ஆத்மஞானம் அடையப்பெறுகிறார் |
ஆத்மஜ்ஞான மாலை எல்லோருக்கும் வீடுபேற்றை அடையச்செய்கிறது || 1||

<u>தெளிவுரை:</u>

ஆத்மஜ்ஞான மாலை என்ற இந்த பாடலை கேட்ட/சிரவணம் செய்த மாத்திரத்தில் ஒருவருக்கு ஆத்மஞானமானது அடையப் பெற்று, தான் பெற்ற ஞானத்தின் மூலம் மானிடர்கள் எல்லோருக்கும் மோக்ஷம்/வீடுபேற்றை அடையச் செய்கிறார்கள் என்பதாக இப்பாடல் வரிகள் உள்ளன.

இங்கு கேட்டல் (சிரவணம்) என்பது **பன்முறை, சான்றோர்கள் வாயிலாக** ஆத்மஞானத்தை பற்றி:

1. கேட்டல் (சிரவணம்) செய்தல்,
2. சிந்தித்தல் (மனனம்) செய்தல்,

3. தெளிதல் (விசாரம்) செய்தல்
4. நிலைப்பெறல் (தானாய் இருத்தல்)

என்று இதில் உள்ள பல்வேறுப் படிகளை புரிந்துக் கொள்ளவேண்டும்.

பாடலை கேட்ட மாத்திரத்தில் மட்டும் ஞானம் ஏற்படுமானால், உலகில் எல்லோரும் இந்த பாடலை ஒலிப்பேழை மூலமோ, பிறர் பாடக்கேட்டோ ஞானமடைதிருப்பார்கள், ஆனால் அவ்வாறு இங்கு கூறப்படவில்லை என்று புரிந்து கொள்ளவேண்டும்.

ஏனெனில் இங்கு கேட்டல் என்பது மனதிற்குத்தானே தவிர செவிகளுக்கு அல்ல. இவ்வாறு நன்றாக கேட்டு, சிந்தித்து, தெளிவுற்று, நிலைபெற்ற மனம் ஏற்றி வைக்கப்பட்ட எண்ணங்களிலிருந்து விடுப்பட்டு **<u>தா(நா)ன் யார்?</u>** என்பதை தன்னை விசாரித்து உணர்கிறது.

இவ்வாறு தெளிவுற்ற மனமே மற்ற மனங்களை, மோக்ஷம் (வீடுபேற்றை) அடையச் உதவுகிறது. அதாவது மனமே முதலில் தன்னை எல்லாவற்றுடன் பந்தப்படுத்திக் கொண்டு, பிறகு அந்த பந்தத்திலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள அம்மனமே முயற்சியும் மேற் கொள்கிறது என்றால் அது மிகையாகாது.

....

<u>சமஸ்க்ருத மூலப்பாடல்:</u>

அஸங்கோ³Sஹமஸங்கோ³Sஹமஸங்கோ³Sஹம்புன: புன: ।
ஸச்சிதா³னந்த³ரூபோSஹமஹமேவாஹமவ்யய: ॥ 2॥

<u>பதச்சேதம்:</u>

அஸங்கோ அஹம் அஸங்கோ அஹம்; அஸங்கோ அஹம் புன: புன: |
ஸச் சித் ஆனந்த ரூபோ அஹம்; அஹம் ஏவ அஹம் அவ்யய: || 2 ||

<u>தாத்பர்யம்:</u>

சங்கமற்றவன் நான், சங்கமற்றவன் நான், மீண்டும் மீண்டும் சங்கமற்றவன் நான் | இருப்பு, அறிவு, ஆனந்தவடிவினன் நான், நான் மட்டுமே மாறுதலற்றவன், அழிவற்றவன் || 2||

<u>தெளிவுரை:</u>

ஆத்மஞானி தன்னுடைய உள்ளத்தில் எப்பொழுதும்:

1. சங்கமற்றவன் (அஸங்கன்)

    - ஸங்கன் என்பது தான் அல்லாத எல்லாவற்றையும் தன்னுடன் (தானாக) சம்பந்தப்படுத்திக் கொள்வது. அஸங்கன் என்பது எதிலும் சம்பந்தப்படாமல் இருப்பது. உதாரணமாக எல்லோருமே **நம் வாழ்க்கை** என்று பேசுகிறோம் அல்லது நினைக்கிறோம் ஆனால் சற்றே மனதை நன்றாக விசாரித்துப் பார்த்தால், படைப்பில் வந்து போகின்ற ஒவ்வொரு உடல்களினாலும், மனங்ளினாலும் படைக்கப்பட்ட நிகழ்வே இவ்வாழ்க்கை என்பது விளங்கும்.

- இவ்வாறு வந்து போகின்ற நிகழ்வை (வாழ்க்கையை) நம்முடன் சம்பந்தப்படுத்திக் கொண்டு மனதளவில் சிக்கி, நாம் யார், நம்முடைய உண்மையான ஸ்வரூபம் என்ன என்பதை புரிந்து கொள்ளாமல் தான் அல்லாத எல்லாவற்றுடன் சங்கமித்துக் கொண்டு இன்ப துன்பங்களுக்கு ஆளாகி விடுகிறோம்.

- எந்த ஒரு தீரன் (முமுக்ஷு), தன் மனதை நன்றாக விசாரித்து தான் அல்லாதவற்றுடன் தன்னை சம்பந்தப்படுத்திக் கொள்ளாமல், தன்னில், தானாய், தன்மயமாய், தன்னுணர்வாய் ஆனந்தமான தன்னுடைய சுயத்திற்க்கு திரும்புகிறாரோ, அவரை சாஸ்த்திரங்கள் **அஸங்கன்** என்று கூறுகிறது.

2. இருப்பு, அறிவு, ஆனந்த வடிவினன் (ஸச்சிதானந்த ஸ்வரூபன்)

    - இப்படைப்பு ஸகுண ப்ரஹ்மமாகிய நிர்குண ப்ரஹ்மமே:

        i. ஸத் ஸ்வரூபன் – படைப்புக்கு காரணமாக (இருப்பாக) தா(நா)னே இருக்கிறேன் – **Existence**

        ii. சித் ஸ்வரூபன் – படைப்பில் அறிவாக தா(நா)னே இருக்கிறேன் – **Consciousness**

        iii. ஆனந்த ஸ்வரூபன் – படைப்பில் ஸத்தாகவும், சித்தாகவும் இருக்கும் தா(நா)னே ஆனந்தமாக இருக்கிறேன் - **Bliss**

3. மாறுதலற்ற,அழிவற்றவன் (அவ்யயன்)

    - மாறுதல், அழிவு என்பதெல்லாம் உடலுக்கும், மனதிற்கும் தான், தூய உணர்வான எனக்கில்லை.

அப்படிப்பட்ட மாறுதலற்ற, அழிவற்ற, **இருப்பு, அறிவு, ஆனந்த வடிவினன் நான்** என்று ஆத்மஞான ஸ்வரூபம் வர்ணிக்கப்படுகிறது.

....

சமஸ்க்ருத மூலப்பாடல்:

நித்யஶுத்^{3}த^{4}விமுக்தோऽஹம்நிராகாரோऽஹமவ்யய: ।
பூ^{4}மானந்த^{3}ஸ்வரூபோऽஹமஹமேவாஹமவ்யய: ॥ 3॥

பதச்சேதம்:

நித்ய ஶுத்த விமுத்தோ அஹம்; நிராகாரோ அஹம் அவ்யய: |
பூமானந்த ஸ்வரூபோ அஹம்; அஹம் ஏவ அஹம் அவ்யய: || 3 ||

தாத்பர்யம்:

நிரந்தரமானவன் தூய்மையானவன் விடுப்பட்டவன் நான், ரூபமற்றவன் நான், மாறுதலற்றவன் |
எல்லையில்லா ஆனந்தவடிவினன் நான், நான் மட்டுமே மாறுதலற்றவன், அழிவற்றவன் ||3||

<u>தெளிவுரை:</u>

ஆத்மஞானி தன்னுடைய உள்ளத்தில் எப்பொழுதும்:

1. நிரந்தரமானவன்

    - வந்து போகின்ற படைப்பாகிய (உடல்/மனம்) நானில்லை,

    - எனக்கு (இறந்த, நிகழ், எதிர்) காலங்களில்லை, ஏனெனில் காலங்கள் என்பது மனிதன் தன்னுடைய மனதில் ஏற்றி வைக்கப்பட்ட எண்ணங்களான நாம ரூபம் மாத்திரமே, அவற்றுக்கு இருப்பு என்பதில்லை.

    - எனக்கு (விழிப்பு, கனவு, உறக்க) நிலைகளில்லை, ஏனெனில் இந்த நிலைகளெல்லாம் உடல் மற்றும் மனதிற்கே. ஆகையால் நான் நிரந்தரமானவன் என்று சாஸ்த்திரங்கள் கூறுகின்றன.

2. தூய்மையானவன்

    - நான் தூய உணர்வு மற்றும் அறிவானவன் – தூய உணர்வான நான் குணங்களுடன் கூடி ஈஸ்வரனாகி உபாதியின் (உடல், மனம்) வாயிலாக படைப்பை படைத்துக்கொண்டு மகிழ்கிறேன், ஆனால் குணங்கள் நானில்லை அதனால் சாஸ்த்திரங்கள் என்னை தூய்மையானவன் (நித்யஸுத்தன்) என்றழைக்கின்றன.

3. விடுப்பட்டவன்

    - நான் மனதையுடையவன் ஆனால் மனம் நானில்லை, ஏனெனில் மனதிற்க்கு தான் பந்தம் மற்றும் பந்தத்திலிருந்து விடுபடுதல் என்பது. நான் எப்பொழுதும் விடுப்பட்டவன்.

4. ரூபமற்றவன்

    - நான் உடல் மற்றும் ரூபங்களையுடையவன், ஆனால் உடல் மற்றும் ரூபம் நானில்லை.

5. எல்லையில்லா ஆனந்த ஸ்வரூபன்

    - ஆதியும் அந்தமும் இல்லா தூய வெட்டவெளித் தத்துவம் நான்.

அப்படிப்பட்ட மாறுதலற்ற, அழிவற்ற, **எல்லையில்லா ஆனந்தவடிவினன் நான்** என்று ஆத்மஞான லட்சணம் வர்ணிக்கப்படுகிறது.

……

<u>சமஸ்க்ருத மூலப்பாடல்:</u>

நித்யோऽஹம்நிரவத்^{3}யோऽஹம்நிராகாரோऽஹமுச்யதே ।
பரமானந்த^{3}ரூபோऽஹமஹமேவாஹமவ்யய: ॥ 4 ॥

<u>பதச்சேதம்:</u>

நித்யோ அஹம் நிரவத்யோ அஹம்; நிராகாரோ அஹம் உச்யதே |
பரமானந்த ரூபோ அஹம்; அஹம் ஏவ அஹம் அவ்யய: || 4 ||

<u>தாத்பர்யம்:</u>

நிரந்தரமானவன் நான், குறைபாடற்றவன் நான், ரூபமற்றவன் நான் என்பர்|
மேலான ஆனந்தமே வடிவானவன் நான், நான் மட்டுமே மாறுதலற்றவன்,
அழிவற்றவன் ||4||

<u>தெளிவுரை:</u>

ஆத்மஞானி தன்னுடைய உள்ளத்தில் எப்பொழுதும்:

1. நிரந்தரமானவன்
    - நித்யவஸ்துவான என்னைத் தவிர வேறொன்றில்லை, தன் ஸ்வருபமாகவே என்னை உணர்ந்த தீரன் (முமுக்ஷு) ஆனந்தத்தில் திளைத்து மகிழ்கிறான்.
2. குறைபாடற்றவன்
    - பூரணமான எனக்கு குறைகளில்லை, ஏனெனில் குறைகள் என்பது உடலுக்கும், மனதுக்கும் தான்.
3. ரூபமற்றவன்
    - நான் பார்ப்பவைகளிலில்லை (ரூபங்களில்லை), ஏனெனில் நானே பார்ப்பவன் ஆவதால்.
4. மேலான ஆனந்தமே வடிவானவன்
    - இருமைகள் (இ(து)ன்பம், விரு(வெறு)ப்பு, நல்(தீ)வினை) அற்ற அமைதியே வடிவான மேலான ஆனந்த வடிவினன் நான்.

அப்படிப்பட்ட மாறுதலற்ற, அழிவற்ற, **மேலான ஆனந்தமே வடிவானவன் நான்** என்று ஆத்மஞான லட்சணம் வர்ணிக்கப்படுகிறது.

....

<u>சமஸ்க்ருத மூலப்பாடல்:</u>

ஶுத்^{3}த^{4}சைதன்யரூபோऽஹமாத்மாராமோऽஹமேவ ச ।
அக^{2}ண்டா^{3}னந்த^{3}ரூபோऽஹமஹமேவாஹமவ்யய: ॥ 5॥

<u>பதச்சேதம்:</u>

ஸுத்த சைதன்ய ரூபோ அஹம்; ஆத்மா ராமோ அஹம் ஏவ ச |
அகண்டானந்த ரூபோ அஹம்; அஹம் ஏவ அஹம் அவ்யய: || 5 ||

<u>தாத்பர்யம்:</u>

தூய உணர்வு வடிவினன் நான், தன்னில் தானாய் மகிழ்பவன் நான் மட்டுமே |
நிறைவானவன் நான், நான் மட்டுமே மாறுதலற்றவன், அழிவற்றவன் ||5||

<u>தெளிவுரை:</u>

ஆத்மஞானி தன்னுடைய உள்ளத்தில் எப்பொழுதும்:

1. தூய உணர்வு வடிவினன்
    - நான் இருக்கிறேன் என்ற தூய உணர்வு வடிவினன்.
2. தன்னில் தானாய் மகிழ்பவன்
    - ஆத்மாவாகிய நான் தன்னில், தானாய், தன்மயமாய், தன்னுணர்வாய், என்னில் மட்டுமே ஆனந்தத்தில் மகிழ்பவன்.
3. நிறைவானவன் நான்
    - நான் நிறைவானவன், எவ்வாறெனில் பூரணத்திலிருந்து பூரணத்தை பிரித்தால் எஞ்சியிருப்பதும் பூரணமே என்று சாஸ்த்திரங்கள் என்னுடைய நிறைவைப் பற்றி எடுத்துரைக்கின்றன.

அப்படிப்பட்ட மாறுதலற்ற, அழிவற்ற, **நிறைவானவன் நான்** என்று ஆத்மஞான லட்சணம் வர்ணிக்கப்படுகிறது.

....

<u>சமஸ்க்ருத மூலப்பாடல்:</u>

ப்ரத்யக்சைதன்யரூபோऽஹம்ஶாந்தோऽஹம்ப்ரக்ரு’தே: பர: ।
ஶாஶ்வதானந்த³ரூபோऽஹமஹமேவாஹமவ்யய: ॥ 6॥

<u>பதச்சேதம்:</u>

ப்ரத்யக் சைதன்ய ரூபோ அஹம்; ஸாந்தோ அஹம் ப்ரக்ருதே: பர: |
ஸாஸ்வத் ஆனந்த ரூபோ அஹம்; அஹம் ஏவ அஹம் அவ்யய: || 6 ||

<u>தாத்பர்யம்:</u>

உள்ளிருக்கும் உணர்வானவன் நான், அமைதியானவன் நான், மாயா சக்தியை கடந்தவன் |
நிரந்தர ஆனந்தவடிவினன் நான், நான் மட்டுமே மாறுதலற்றவன், அழிவற்றவன் ||6||

<u>தெளிவுரை:</u>

ஆத்மஞானி தன்னுடைய உள்ளத்தில் எப்பொழுதும்:

1. உள்ளிருக்கும் உணர்வானவன்
    - படைப்பில் (சேதனம் மற்றும் அசேதனங்களில்) இருக்கும் உணர்வு நானே.

2. அமைதியானவன்

    - இருமைகள் (இ(து)ன்பம், விரு(வெறு)ப்பு, நல்(தீ)வினை) அற்ற அமைதியே வடிவானவன் நான்.

3. மாயா சக்தியை கடந்தவன்

    - மாயை என்பது இருப்பதுமில்லை, இல்லாததுமில்லை (வந்து போகின்றது), இப்படைப்பில் வந்து போகின்ற உடல்களையும், மனங்களையும் கடந்த உணர்வே நான்.

4. நிரந்தர ஆனந்தத்தில் திளைப்பவன் நான்.

அப்படிப்பட்ட மாறுதலற்ற, அழிவற்ற, **நிரந்தர ஆனந்தவடிவினன் நான்** என்று ஆத்மஞான லட்சணம் வர்ணிக்கப்படுகிறது.

....

<u>சமஸ்க்ருத மூலப்பாடல்:</u>

தத்த்வாதீத: பராத்மாஹம் மத்⁴யாதீத: பர: ஶிவ: ।
மாயாதீத: பரம்ஜ்யோதிரஹமேவாஹமவ்யய: ॥ 7॥

<u>பதச்சேதம்:</u>

தத்வ அதீத: பராத்ம அஹம்; மத்ய அதீத: பர: ஸிவ: |
மாய அதீத: பரம் ஜ்யோதிர் அஹம் ஏவ அஹம் அவ்யய: || 7 ||

<u>தாத்பர்யம்:</u>

தத்துவங்கள் எல்லாவற்றிக்கும் அப்பாற்ப்பட்டவன் நான், ஆதி, நடு, அந்தங்களுக்கு அப்பாற்ப்பட்ட வெட்டவெளி |
மாயையை கடந்த மேலான அறிவுவடிவினன் நான், நான் மட்டுமே மாறுதலற்றவன், அழிவற்றவன் ||7||

<u>தெளிவுரை:</u>

ஆத்மஞானி தன்னுடைய உள்ளத்தில் எப்பொழுதும்:

1. தத்துவங்கள் எல்லாவற்றிக்கும் அப்பாற்ப்பட்ட ஆத்மா

    - ப்ரக்ருதி தத்துவம், மஹத் தத்துவம், அஹங்கார தத்துவம் போன்ற தத்துவங்களை கடந்த ஆத்மதத்துவமே நான்.

2. முதல், நடு, முடிவற்ற தூய வெட்டவெளி நான்.

3. மாயையை (உடல் மற்றும் மனம்) கடந்த அறிவுவடிவினன்.

அப்படிப்பட்ட மாறுதலற்ற, அழிவற்ற, **மாயையை கடந்த அறிவுவடிவினன் நான்** என்று ஆத்மஞான லட்சணம் வர்ணிக்கப்படுகிறது.

....

<u>சமஸ்க்ருத மூலப்பாடல்:</u>

நானாரூபவ்யதீதோऽஹம்சிதா^{3}காரோऽஹமச்யுத: ।
ஸுக^{2}ரூபஸ்வரூபோऽஹமஹமேவாஹமவ்யய: ॥ 8॥

<u>பதச்சேதம்:</u>

நானா ரூபி அதீதோ அஹம்; சிதாகாரோ அஹம் அச்யுத: |
ஸுகரூப ஸ்வரூபோ அஹம்; அஹம் ஏவ அஹம் அவ்யய: || 8 ||

<u>தாத்பர்யம்:</u>

பலவிதமான நாமங்களுக்கும், ரூபங்களுக்கும் அப்பாற்பட்டவன் நான், தூய அறிவு நான், தன்னிலையிலிருந்து நழுவாதவன் |
ஆனந்தவடிவினன் நான், நான் மட்டுமே மாறுதலற்றவன், அழிவற்றவன் ||8||

<u>தெளிவுரை:</u>

ஆத்மஞானி தன்னுடைய உள்ளத்தில் எப்பொழுதும்:

1. பலவிதமான நாமங்களுக்கும், ரூபங்களுக்கும் அப்பாற்பட்டவன்
    - எல்லா ரூபங்களுக்கும், நாமங்களுக்கும் ஆதாரமாக **நான் இருக்கிறேன்** ஆனால் அந்த ரூபங்கள், நாமங்கள் நானில்லை.
2. தூய அறிவு
    - படைப்பில் தூய அறிவாக நான் இருக்கிறேன்.
3. தன்னிலையிலிருந்து நழுவாதவன் (அச்சுதன்)
    - ச்சுதன் என்றால் நழுவுதல், அச்சுதன் என்றால் நழுவாமல் இருத்தல், நான் எப்பொழுதும் என் சுயத்திலிருந்து நழுவாமல் இருக்கிறேன், மனமே என்னிடமிருந்து நழுவுகிறது.
4. ஆனந்த வடிவினன்
    - படைப்பில் எல்லா உயிர்களும் ஆனந்தத்தை விரும்புகின்றன.

அப்படிப்பட்ட மாறுதலற்ற, அழிவற்ற, **ஆனந்தவடிவினன் நான்** என்று ஆத்மஞான லட்சணம் வர்ணிக்கப்படுகிறது.

<u>சமஸ்க்ருத மூலப்பாடல்:</u>

மாயாதத்கார்யதே^{3}ஹாதி^{3} மம நாஸ்த்யேவ ஸர்வதா^{3} ।
ஸ்வப்ரகாஸைகரூபோऽஹமஹமேவாஹமவ்யய: ॥ 9॥

<u>பதச்சேதம்:</u>

மாயா தத் கார்ய தேஹாதி; மம நாஸ்தி ஏவ ஸர்வதா |
ஸ்வப்ரகாஸ ஏகரூபோ அஹம்; அஹம் ஏவ அஹம் அவ்யய: || 9 ||

<u>தாத்பர்யம்:</u>

மாயா சக்தியினால் செயல்படும் (பஞ்ச கோசஞ்கள்) எப்பொழுதும் நானில்லை |
ஒரே சுயம் ப்ரகாசம் நான், நான் மட்டுமே மாறுதலற்றவன், அழிவற்றவன் ||9||

<u>தெளிவுரை:</u>

ஆத்மஞானி தன்னுடைய உள்ளத்தில் எப்பொழுதும்:

1. மாயையினால் (பஞ்ச கோசங்கள்) ஏற்ப்படும் செயல்மயக்கம் என்பது எப்பொழுதும் எனக்கில்லை.

2. ஒரே சுயம் ப்ரகாசம்

    - படைப்பில் (அறிவுருள்ள மற்றும் அறிவற்ற) எல்லாவற்றிலும் நான் ஒருவனே ப்ரகாசிக்கிறேன்.

அப்படிப்பட்ட மாறுதலற்ற, அழிவற்ற, **ஒரே சுயம் ப்ரகாசம் நான்** என்று ஆத்மஞான லட்சணம் வர்ணிக்கப்படுகிறது.

....

<u>சமஸ்க்ருத மூலப்பாடல்:</u>

கு³ணத்ரயவ்யதீதோऽஹம்ப்³ரஹ்மாதீ³நாம் ச ஸாக்ஷ்யஹம் ।
அனந்தானந்தரூபோऽஹமஹமேவாஹமவ்யய: ॥ 10॥

<u>பதச்சேதம்:</u>

குணத்ரயி அதீதோ அஹம்; ப்ரஹ்ம ஆதீனாம் ச ஸாக்ஷி அஹம் |
அனந்த ஆனந்த ரூபோ அஹம்; அஹம் ஏவ அஹம் அவ்யய: || 10 ||

<u>தாத்பர்யம்:</u>

முக்குணத்திற்க்கு அப்பாற்பட்டவன் நான், ப்ரஹ்மா முதலியவர்களுக்கு ஸாக்ஷியானவன் நான் |
முடிவற்ற ஆனந்தவடிவினன் நான், நான் மட்டுமே மாறுதலற்றவன், அழிவற்றவன் ||10||

<u>தெளிவுரை:</u>

ஆத்மஞானி தன்னுடைய உள்ளத்தில் எப்பொழுதும்:

1. முக்குணத்திற்க்கு அப்பாற்பட்டவன்

    - ஸத்வம், ரஜஸ், தமஸ் என்னும் மூன்று குணங்களை கருவிகளாக்கொண்டு இப்படைப்பை படைத்துக் கொண்டவன் நான், அதனால் இந்த குணங்கள் நானில்லை.

2. ப்ரஹ்மா முதலியவர்களுக்கும் ஸாக்ஷியானவன்

    - படைப்பின் ஸாக்ஷியாக நானே இருக்கிறேன்.

3. முடிவற்ற ஆனந்தவடிவினன் நான்.

அப்படிப்பட்ட மாறுதலற்ற, அழிவற்ற, **முடிவற்ற ஆனந்தவடிவினன் நான்** என்று ஆத்மஞான லட்சணம் வர்ணிக்கப்படுகிறது.

....

<u>சமஸ்க்ருத மூலப்பாடல்:</u>

அந்தர்யாமிஸ்வரூபோऽஹம்கூடஸ்த:[2] ஸர்வகோ[3]ऽஸ்ம்யஹம்।
பரமாத்மஸ்வரூபோऽஹமஹமேவாஹமவ்யய: ॥ 11॥

<u>பதச்சேதம்:</u>

அந்தயாமி ஸ்வரூபோ அஹம்; கூடஸ்த: ஸர்வகோஸ்மி அஹம் |
பரமாத்ம ஸ்வரூபோ அஹம்; அஹம் ஏவ அஹம் அவ்யய: || 11 ||

<u>தாத்பர்யம்:</u>

உள்ளுணர்வு வடிவினன் நான், மாற்ற முடியாதவன் நான், எங்கும் நிறைந்தவன் நான்| ஒன்றேயானவன் நான், நான் மட்டுமே மாறுதலற்றவன், அழிவற்றவன் ||11||

<u>தெளிவுரை:</u>

ஆத்மஞானி தன்னுடைய உள்ளத்தில் எப்பொழுதும்:

1. உள்ளுணர்வு வடிவினன்

    - எல்லாவற்றையும் உள்ளே(வெளியே)யும் இயக்குபவனாகவும், தன்னை தானே இயக்குபவனாகவும், இயங்கும் சக்திக்கு ஆதாரமாக இருப்பவன் நான்.

2. மாற்ற முடியாதவன்

    - எந்த சக்திகளாலும் (செயல்) மாற்ற முடியாத பேருணர்வு (ஆற்றல்) நான்.

    - இதனையே விஞ்ஞானம் **<u>Energy can neither be created nor be destroyed, but one form of energy can be transformed into another form</u>**. அதாவது ஆற்றலை ஆக்கவோ மாற்றவோ அழிக்கவோ இயலாது, ஆனால் ஆற்றலிலிருந்து வெளிப்படும் ஒர் சக்தியினுடைய செயலாக்கத்தை வேறோர் சக்தியினுடைய செயலாக்கமாக மாற்றலாம்.

    - உதாரணம் – சூரியன் என்னும் உடலில் (Solar Disc) உணர்வாக இருப்பவன் நான், அவ்வாறு சூரியனிலிருந்து வெளிப்படும் சக்தியானது ஒளி (Light energy) ஆகிய சக்தியை விஞ்ஞானம் மின் சக்தியாக (Electrical energy) மாற்றுகிறது, இதில் சக்தியினுடைய செயலாக்கம் தான் மாற்றப்படுகிறது உணர்வு தன்னிலையில் உள்ளது.

3. எங்கும் நிறைந்தவன்

    - ஆத்மாவாகிய நான் இருப்பதனாலேயே படைப்பு இருக்கிறது, இதனையே ப்ரஹல்லாத மஹரிஷி **இறைவன் தூணிலும் இருக்கிறார் துரும்பிலும் இருக்கிறார்** என்றும், மாணிக்கவாசகரோ **அணுவுக்கணுவாய் அப்பாலுக்கப்பாலாய்** என்றும் தங்களின் இறை அனுபவத்தை **எங்கும் நிறைந்தவன்** என்று பாடித் திளைக்கின்றனர்.

4. ஒன்றேயானவன்

    - தன் ஸ்வரூபத்தை தானாகவே உணர்ந்த ஞானிக்கு, தனக்கு மேலானவனுமில்லை, கீழானவனுமில்லை, நிகரானவனுமில்லை, தான் மட்டுமே ஒன்றேயான பரமாத்மன் என்ற தன்னுணர்வில் லயித்து இருக்கிறான்.

அப்படிப்பட்ட மாறுதலற்ற, அழிவற்ற, **ஒன்றேயானவன் நான்** என்று ஆத்மஞான லட்சணம் வர்ணிக்கப்படுகிறது.

....

<u>சமஸ்க்ருத மூலப்பாடல்:</u>

நிஷ்கலோऽஹம்நிஷ்க்ரியோऽஹம்ஸர்வாத்மாத்³ய: ஸனாதன: ।
அபரோக்ஷஸ்வரூபோऽஹமஹமேவாஹமவ்யய: ॥ 12॥

<u>பதச்சேதம்:</u>

நிஷ்கலோ அஹம் நிஷ்க்ரியோ அஹம்; ஸர்வாத்ம அத்ய: ஸனாதன: |
அபரோக்ஷ ஸ்வரூபோ அஹம்; அஹம் ஏவ அஹம் அவ்யய: || 12 ||

<u>தாத்பர்யம்:</u>

உருவமற்றவன் நான், செயலற்றவன் நான், எல்லாவற்றிலும் நான் இருக்கிறேன், எப்பொழுதுமுள்ள பழ(ர)ம்ப்பொருள் நானே |
என்னை நானே அறிபவன், நான் மட்டுமே மாறுதலற்றவன், அழிவற்றவன் ||12||

<u>தெளிவுரை:</u>

ஆத்மஞானி தன்னுடைய உள்ளத்தில் எப்பொழுதும்:

1. உருவமற்றவன்

    - உருவங்களுக்கு ஆதாரமாக நான் இருக்கிறேன், ஆனால் நான் உருவமற்றவன், ஏனெனில் உருவங்களெல்லாம் வந்து போகின்ற அநித்திய வஸ்து.

2. செயலற்றவன்

    - செயல்களெல்லாம் உடலுக்கும் மனதிற்குமே, ஸர்வ ஸாக்ஷியான நான் செயல்களை பார்த்து கொண்டிருப்பவன்.

3. எல்லாவற்றிலும் நான் இருக்கிறேன்

   - உயிருள்ள மற்றும் உயிரற்ற எல்லாவற்றிலும் நான் இருக்கிறேன். நானில்லாமல் இந்த ஜீவஜகத்துக்களில்லை, ஆனால் இந்த ஜீவஜகத்துக்களில் நானில்லை.

4. எப்பொழுதுமுள்ள பழ(ர)ம்ப்பொருள் நான்.

5. என்னை நானே அறிபவன்

   - அனைத்தையும் அறியும் அறிவாக நான் இருக்கிறேன், என்னை அறிய வேறோன்றுமில்லை ஏனெனில் என்னை நானே அறிவேன் (அறியப்படுபவனாக நானில்லை, அறிபவனாகவே இருப்பதால்).

அப்படிப்பட்ட மாறுதலற்ற, அழிவற்ற, **என்னை நானே அறிபவனான நான்** என்று ஆத்மஞான லட்சணம் வர்ணிக்கப்படுகிறது.

....

<u>சமஸ்க்ருத மூலப்பாடல்:</u>

த்[3]வந்த்[3]வாதி[3]ஸாக்ஷிரூபோऽஹமசலோऽஹம்ஸனாதன: ।
ஸர்வஸாக்ஷிஸ்வரூபோऽஹமஹமேவாஹமவ்யய: ॥ 13॥

<u>பதச்சேதம்:</u>

த்வந்த்வாதி ஸாக்ஷி ரூபோ அஹம்; அசலோ அஹம் ஸனாதன: |
ஸர்வ ஸாக்ஷி ஸ்வரூபோ அஹம்; அஹம் ஏவ அஹம் அவ்யய: || 13 ||

<u>தாத்பர்யம்:</u>

இருமைகளுக்கு சாக்ஷியாக இருப்பவன் நான், அசைக்கமுடியாதவன் நான், எங்குமுள்ள பழ(ர)ம்ப்பொருள் |
எல்லாவற்றிக்கும் சாக்ஷியாக இருப்பவன் நான், நான் மட்டுமே மாறுதலற்றவன், அழிவற்றவன் ||13||

<u>தெளிவுரை:</u>

ஆத்மஞானி தன்னுடைய உள்ளத்தில் எப்பொழுதும்:

1. இருமைகளுக்கு சாக்ஷியாக இருப்பவன்

   - இருமைகள் எல்லாம் சக்திகளாகிய உடலுக்கும் மனதிற்க்கும் மட்டுமே. (வெப்பம், குளிர், இன்பம், துன்பம், விருப்பு, வெறுப்பு, நல்வினை, தீவினை, புண்ணியம், பாபம்) உணர்வாகிய நான் இவற்றிக்கு சாக்ஷியாக இருக்கிறேன்.

2. அசைக்கமுடியாதவன்

   - மாயையின் செயல்களாலும், இருமைகளாலும அசைக்கமுடியாதவன் நான்.

3. எங்குமுள்ள பழ(ர)ம்ப்பொருள் நான்.

4. எல்லாவற்றிக்கும் சாக்ஷியாக இருப்பவன் நான்.

அப்படிப்பட்ட மாறுதலற்ற, அழிவற்ற, **எல்லாவற்றிக்கும் சாக்ஷியாக இருப்பவன் நான்** என்று ஆத்மஞான லட்சணம் வர்ணிக்கப்படுகிறது.

....

<u>சமஸ்க்ருத மூலப்பாடல்:</u>

ப்ரஜ்ஞானக⁴ன ஏவாஹம் விஜ்ஞானக⁴ன ஏவ ச ।
அகர்தாஹமபோ⁴க்தாஹமஹமேவாஹமவ்யய: ॥ 14॥

<u>பதச்சேதம்:</u>

ப்ரஜ்ஞான கன ஏவ அஹம்; விஜ்ஞான கன ஏவ ச |
அகர்தா அஹம் அபோக்தா அஹம்; அஹம் ஏவ அஹம் அவ்யய: || 14 ||

<u>தாத்பர்யம்:</u>

உணர்வேயானவன் அறிவேயானவன் நான் மட்டுமே |
நான் செயல்களை செய்வபவனுமில்லை, செயல்களை அனுபவிப்பவனுமில்லை,
நான் மட்டுமே மாறுதலற்றவன், அழிவற்றவன் ||14||

<u>தெளிவுரை:</u>

ஆத்மஞானி தன்னுடைய உள்ளத்தில் எப்பொழுதும்:

1. உணர்வேயானவன் - படைப்பில் உணர்வாகவே நான் இருக்கிறேன்.

2. அறிவேயானவன்

    - ஓரறிவு தாவரம் முதல் ஆறறிவு மனிதன் வரை, படைப்பில் அந்தந்த உடலுக்கேற்றவாறு அறிவாக நான் பிரகாசிக்கிறேன்.

3. நான் செயல்களை செய்பவனில்லை

    - உபாதியினுடைய (உடல், மனம்) செயல்களுக்கு சாக்ஷியாக இருப்பதால் நான் செயலற்றவன்.

4. நான் செயல்களை அனுபவிப்பவனுமில்லை

    - உபாதியாகிய உடல் மற்றும் மனம் செய்யும் செயல்களை அனுபவிப்பவன் நானில்லை.

அப்படிப்பட்ட மாறுதலற்ற, அழிவற்ற, **செயலற்றவன், அனுபவமற்றவன் நான்** என்று ஆத்மஞான லட்சணம் வர்ணிக்கப்படுகிறது.

....

<u>சமஸ்க்ருத மூலப்பாடல்:</u>

நிராதா^{4}ரஸ்வரூபோSஹம்ஸர்வாதா^{4}ரோSஹமேவ ச ।
ஆப்தகாமஸ்வரூபோSஹமஹமேவாஹமவ்யய: ॥ 15॥
<u>பதச்சேதம்:</u>

நிர் ஆதார ஸ்வரூபோ அஹம்; ஸர்வ ஆதாரோ அஹம் ஏவ ச |
ஆப்த காம ஸ்வரூபோ அஹம்; அஹம் ஏவ அஹம் அவ்யய: || 15 ||

<u>தாத்பர்யம்:</u>

ஆதாரமற்றவடிவினன் நான், எல்லாவற்றிக்கும் ஆதாரமானவன் நான் மட்டுமே|
எனக்கு நிறைவேறும் ஆசைகள் இல்லை, நான் மட்டுமே மாறுதலற்றவன்,
அழிவற்றவன் ||15||

<u>தெளிவுரை:</u>

ஆத்மஞானி தன்னுடைய உள்ளத்தில் எப்பொழுதும்:

1. ஆதாரமற்றவன் - எனக்கு ஆதாரமில்லை ஏனெனில் நானே அனைத்திற்க்கும் ஆதாரமாகயிருப்பதால்.

2. எல்லாவற்றிக்கும் ஆதாரமாக நானே இருக்கிறேன்.

3. ஆசைகளற்றவன் - ஆசைகள் என்பது மனதிற்கே, மனதின் ஆசைகளை மனது, உடலின் மூலம் பூர்த்தி செய்துகொள்ள உணர்வாக நான் இருக்கிறேன், ஆனால் எனக்கு ஆசைகள் இல்லை.

அப்படிப்பட்ட மாறுதலற்ற, அழிவற்ற, **ஆசைகளற்றவன் நான்** என்று ஆத்மஞான லட்சணம் வர்ணிக்கப்படுகிறது.
....

<u>சமஸ்க்ருத மூலப்பாடல்:</u>

தாபத்ரயவினிர்முக்தோ தே^{3}ஹத்ரயவிலக்ஷண: ।
அவஸ்தா^{2}த்ரயஸாக்ஷ்யஸ்மி சாஹமேவாஹமவ்யய: ॥ 16॥

<u>பதச்சேதம்:</u>

தாபத்ர்ய விநிர்முக்தோ தேஹத்ர்ய விலக்ஷண: |
அவஸ்தா த்ரய ஸாக்ஷி அஸ்மி ச அஹம் ஏவ அஹம் அவ்யய: || 16 ||

<u>தாத்பர்யம்:</u>

மூன்று வகை இன்னல்கள் எனக்கில்லை, மூன்று சரீரங்ளுக்கு வேறானவன் |
மூன்று அவஸ்தைகளின் ஸாக்ஷியானவன் நான், நான் மட்டுமே மாறுதலற்றவன்,
அழிவற்றவன் ||16||

<u>தெளிவுரை:</u>

ஆத்மஞானி தன்னுடைய உள்ளத்தில் எப்பொழுதும்:

1. மூன்று வகை இன்னல்கள் எனக்கில்லை.

    - ஆத்யாத்மிகம் - தன்னைப்பற்றி கொண்டு வருவன (என்னுடைய உடல், மனம் போன்ற எண்ணங்கள்)
    - ஆதிபௌதிகம் - பிறவற்றைப்பற்றிக் கொண்டு வருவன (என்னுடைய தாய், தந்தை, மனைவி, பிள்ளைகள் , வீடு, செல்வம், போன்ற எண்ணங்கள்).
    - ஆதிதைவிகம் - இயற்க்கையைப் பற்றி கொண்டு வருவன (என்னுடைய தெய்வம், மதம் போன்ற எண்ணங்கள்)

2. மூன்று சரீரங்ளுக்கு வேறானவன்.

    - ஸ்தூல சரீரம் – பஞ்சபூதங்களாலானது, புலன்களுக்குப் புலப்படும் உடம்பு.
    - ஸுக்ஷ்ம சரீரம் – மனஸ் தத்வத்தால் உண்டானது, புலன்களுக்குப் புலப்படாத உடம்பு.
    - காரண சரீரம் – ப்ராரப்த (முன்வினை) கர்மாவினால் உண்டானது, புலன்களுக்கும் மனதிற்க்கும் புலப்படாத உடம்பு.

3. மூன்று நிலை (அவஸ்தைகளின்) ஸாக்ஷி

    - விழிப்பு நிலை – உடலும் மனமும் செயலாற்றிப் படைக்கும் நிலை
    - கனவு நிலை – உடல் உறங்கியும், மனம் விழித்திருந்து படைக்கும் நிலை.
    - உறக்க நிலை – உடலும் மனமும் உறங்கிய நிலை.

அப்படிப்பட்ட மாறுதலற்ற, அழிவற்ற, **மூன்று வகை இன்னல்கள், மூன்று சரீரங்கள், மூன்று நிலைகளுக்கு அப்பாற்ப்பட்டவன் நான்** என்று ஆத்மஞான லட்சணம் வர்ணிக்கப்படுகிறது.

....

<u>சமஸ்க்ருத மூலப்பாடல்:</u>

த்^{3}ரு'க்^{3}த்^{3}ரு'ஶ்யௌ த்^{3}வௌ பதா^{3}ர்தௌ^{2} ஸ்த: பரஸ்பரவிலக்ஷணௌ ।
த்^{3}ரு'க்^{3}ப்^{3}ரஹ்ம த்^{3}ரு'ஶ்யம் மாயேதி ஸர்வவேதா^{3}ந்தடி^{3}ண்டி^{3}ம: ॥ 17॥

அஹம் ஸாக்ஷீதி யோ வித்^{3}யாத்^{3}விவிச்யைவம் புன: புன: ।
ஸ ஏவ முக்த: ஸோ வித்^{3}வானிதி வேதா^{3}ந்தடி^{3}ண்டி^{3}ம: ॥ 18॥

<u>பதச்சேதம்:</u>

த்ருக் த்ருஸௌ த்வௌ பதார்தௌ ஸ்த: பரஸ்பர விலக்ஷணௌ |
த்ருக் ப்ரஹ்ம த்ருஸ்யம் மாயேதி ஸர்வ வேதாந்த டிண்டிம: || 17 ||

அஹம் ஸாக்ஷி இதி யோ வித்யாத் விவிச்ய ஏவம் புன: புன: |
ஸ ஏவ முக்த: ஸோ வித்வான் இதி வேதாந்த டிண்டிம: || 18 ||

தாத்பர்யம்:

பார்ப்பான், பார்க்கப்படுவது என்று இரண்டு விஷயங்கள் ஒன்றையொன்று சாராமல் இருக்கிறது|
பார்ப்பான் உணர்வு, பார்க்கப்படுவது மாயா என்று சாஸ்த்திரங்கள் எடுத்துரைக்கின்றன.||17||

நான் ஸாக்ஷி என்று அறிந்து யார் மீண்டும் மீண்டும் மனதை விசாரிக்கிராரோ |
அவரே முக்தர், அவரே அனைத்தையும் அறிந்தவர் என்று சாஸ்த்திரங்கள் எடுத்துரைக்கின்றன. ||18||

தெளிவுரை:

பார்ப்பான், பார்க்கப்படுவது என்று இரண்டு விஷயங்கள் ஒன்றையொன்று சாராமல் இருக்கிறது

- பார்ப்பான் – உணர்வு/பிரம்மம்/ஆத்மா/நான்
- பார்க்கப்படுவது – மாயை/சக்தி
    1. பார்வை சக்தி
    2. பார்க்கப்ப்டும் கருவி

இப்பாடலில் இரண்டு விஷயங்கள் என்று கூறினாலும், சாஸ்த்திரங்கள் இதனை **த்ரிபுடி(மூன்று)** என்றே கூறுகிறது, இம்மூன்றும் ஒன்றையோன்று சாராமல் இருக்கிறது, ஆனால் இம்மூன்றும் இணையும் பொழுது படைப்பு நிகழ்கிறது.

த்ரிபுடி	செயல்பாடு	தாத்பர்யம்
பார்ப்பான்	உணர்வு/பிரம்மம்/ஆத்மா	நான் **(சிவம்)**
பார்வை	மனம்/சக்தி	மனம் **(சக்தி)**
பார்க்கபடும் கருவி	உடல்/உபாதி	கண் **(உபாதி)**
பார்ப்பான் + பார்வை + பார்க்கப்படும் கருவி = படைப்பு		

பார்ப்பானாகிய நான் இருப்பதினாலேயே, பார்வை சக்தியின் மூலம், பார்க்கபடும் கருவியாகிய உபாதியின் (கண் முதலியவை) மூலம், படைப்பு (பார்க்கப்படுவது) நிகழ்கிறது. இப்புரிதலையே, **சிவம் இல்லாமல் சக்தி இல்லை, சக்தி இல்லாமல் சிவம் இல்லை** என்று சான்றோர்கள் சாஸ்த்திரங்களின் வாயிலாக கூறுகிறார்கள். ||17||

இவ்வாறு பார்ப்பானாகிய **நான்** வெறும் ஸாக்ஷி மாத்திரமாக உள்ளேன் என்று எந்த ஒரு தீரன் (முமுக்ஷு) தன்னுடைய மனதை மீண்டும் மீண்டும் விசாரித்து உணருகிறாரோ, அவரே ஜீவன்முக்தர், ஆத்மஞானி என்றும், அனைத்தையும் அறிந்த வாலறிவன் என்றும், சாஸ்த்திரங்கள் எடுத்துரைக்கின்றன. ||18||

....

சமஸ்க்ருத மூலப்பாடல்:

க⁴டகுட்³யாதி³கம் ஸர்வம் ம்ரு'த்திகாமாத்ரமேவ ச ।
தத்³வத்³ப்³ரஹ்ம ஜக³த்ஸர்வமிதி வேதா³ந்தடி³ண்டி³ம: ॥ 19॥

ப்³ரஹ்ம ஸத்யம் ஜக³ன்மித்²யா ஜீவோ ப்³ரஹ்மைவ நாபர: ।
அனேன வேத்³யம் ஸச்சா²ஸ்த்ரமிதி வேதா³ந்தடி³ண்டி³ம: ॥ 20॥

__பதச்சேதம்:__

கட குட்யாதி கம் ஸர்வம் ம்ருத்திகா மாத்ரம் ஏவ ச |
தத் வத் ப்ரஹ்ம ஜகத் ஸர்வம் இதி வேதாந்த டிண்டிம: || 19 ||
ப்ரஹ்ம ஸத்யம் ஜகன் மித்யா ஜீவோ ப்ரஹ்ம ஏவ நா பர: |
அனேன வேத்யம் ஸத் சாஸ்த்ரம் இதி வேதாந்த டிண்டிம: || 20 ||

__தாத்பர்யம்:__

குடம் பானை எல்லாம் மண்ணாலானவை மட்டுமே |
அவ்வாறு உணர்வே எல்லாமாக இருக்கிறது என்று சாஸ்த்திரங்கள் எடுத்துரைக்கின்றன. ||19||

உணர்வே ஸத்தியம் படைப்பு மாயா, ஜீவனே உணர்வு |
அனைத்து வேதங்களும், சாஸ்த்திரங்களும் இதனை எடுத்துரைக்கின்றன. ||20||

__தெளிவுரை:__

எவ்வாறு குடம், பானை இவையெல்லாம் வெறும் நாமம் மற்றும் ரூபங்களோ, மேலும் இவற்றிக்கு ஆதாரமாக (காரணமாக) மண் மட்டுமே இருக்கிறதோ, அவ்வாறே உணர்வாகிய நானே இப்படைப்புக்கு ஆதாரமாக (காரணமாக) இருக்கிறேன் என்று சாஸ்த்திரங்கள் எடுத்துரைக்கின்றன.

உணர்வாகிய ப்ரஹ்மமாகிய சிவமாகிய நான் ஸத்யம் (நித்யம்), சக்தியாகிய உபாதிகள் (உடல், மனம்...) மித்யா (அநித்யம்).

1. ஸத்யம் (நித்யம்) என்பது எல்லாமாக, எல்லாகாலத்திலும், எங்கும் நீக்கமற நிறைந்திருப்பது, அதுவே **உணர்வு, பிரம்மம், ஆத்மா (நான்**).

2. மித்யா (அநித்யம்) என்பது தோன்றி, இருந்து, மறைகின்ற (வந்து போகின்றது) **படைப்பு (ஜகத்).**

இவ்வாறு வந்து போகின்ற இப்படைப்பை, சக்தியின் வாயிலாக படைத்துக்கொண்டு அவற்றிக்கு சாக்ஷியாக இருக்கும் **ஜீவனாகிய நானே உணர்வாகிய பிரம்மம்** என்ற அனைத்து வேதங்களும், சாஸ்த்திரங்களும் எடுத்துரைக்கின்றன.

....

__சமஸ்க்ருத மூலப்பாடல்:__

அந்தர்ஜ்யோதிர்ப³ஹிர்ஜ்யோதி: ப்ரத்யக்³ஜ்யோதி: பராத்பர: ।
ஜ்யோதிர்ஜ்யோதி: ஸ்வயம்ஜ்யோதிராத்மஜ்யோதி: ஶிவோऽஸ்ம்யஹம் ॥ 21॥

__பதச்சேதம்:__

அந்தர் ஜ்யோதிர் பஹிர் ஜ்யோதி: ப்ரத்யக் ஜ்யோதி: பராத்பர: |
ஜ்யோதிர் ஜ்யோதி: ஸ்வயம் ஜ்யோதிர் ஆத்ம ஜ்யோதி: ஸிவோஸ்மி அஹம் || 21||

__தாத்பர்யம்:__

உட்ப்ரகாசம் வெளிப்ரகாசம் எங்கும் நீக்கமற நிறைந்துள்ள அப்ப்ரகாசம் அனைத்திற்கும் மேலானது |

ப்ரகாசங்களுக்கு ப்ரகாசமாகவும், தன்னை ப்ரகாசிக்கும் ஆத்ம ப்ரகாசமாகிய சிவமே நான் ||21||

<u>தெளிவுரை:</u>

என்னில் ப்ரகாசிக்கும் அறிவே, படைப்பிலும் ப்ரகாசிக்கிறது, அந்த அறிவு ப்ரகாசமே அனைத்திற்கும் மேலானது, அறிவிற்கு எல்லாம் அறிவாகவும், த(எ)ன்னை தா(நா)னே ப்ரகாசித்துக் கொண்டுள்ள சிவமே நான்.

இவ்வாறு இப்பாடலில் கூறப்பட்டுள்ள விஷயங்களை ஒரு தீரன் (முமுக்ஷு) சான்றோர்கள் வாயிலாக சிரவணம், மனனம், நிதித்யாஸனம் செய்து, மனதை நன்றாக விசாரித்து, **எல்லாவற்றையும் அறியும் அறிவு சொரூபமான தூய அறிவே தா(நா)ன் என்று உணர்ந்து**, உடல் மற்றும் மனதின் செயல்கள் த(எ)ன்னை பாதிப்பதில்லை என்று வாழ்பவரை சாஸ்த்திரங்கள் **<u>ஆத்மஞானி, ஜீவன்முக்தர், விவே(யோ)கி, சித்தர், பிராமணன், புத்தர், பார்ப்பான், இறைத்தூதர், அவதாரம், பக்தர்</u>** என்றெல்லாம் புகழ்ந்து கூறுகின்றது.

இதுவே ஆத்மஞானியின் மனநிலை என்றும், ஆத்மஞானம் (வீடுபேற்றை) அடைவதற்கான வழிகள் என்று இப்பாடல் வரிகள் தெள்ளத் தெளிவாக எடுத்துரைக்கின்றது.

||ஓம் தத் ஸத்||